# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவைச் சட்டம்

---

*[1988, ஜூன் மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1988, ஜூன் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 1.50 தபாற் செலவு: ரூபா 1.15

# 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவைச் சட்டம்

[1988 ஜூன் 22 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ ஓ. 66/84
1784

தாதிகளை ஆட்சேர்த்தல், அவர்களது கல்வி, உயர் தொழில்சார் நடைமுறை ஆகியவற்றுக்கான தரங்களை விதித்தல் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குவதெற்கெனத் தாதிமார் பேரவையொன்றைத் தாபிப்பதற்கும்; தாதிகளைப் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், இது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப் படக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.*

## பாகம் I

### இலங்கைத் தாதிமார் பேரவையைத் தாபித்தல்

2. (1) இலங்கைத் தாதிமார் பேரவை என அழைக்கப்படும் (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். *இலங்கைத் தாதிமார் பேரவையைத் தாபித்தல்.*

(2) பேரவையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறு வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதாயிருத்தலும் வேண்டும், அத்துடன் அத்தகைய பெயர் கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்; அத்துடன் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை வைத்திருக்கலாம், கொள்ளலாம் அத்துடன் கைபுதிர்க்கலாம்.

(3) பேரவையின் இலச்சினையானது, பேரவையின் செயலாளரினால் அல்லது பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளினால் எழுத்தில் அளிக்கப்பட்ட அதிகாரமின்றி எச் சாதனத்திலும் பொறிக்கப் படுதலாகாது.

3. பேரவையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— *பேரவையின் அமைப்பு.*

(i) பேரவையின் தவிசாளர்;

(ii) (அ) பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதிக்குத் தாதித் தொழில் புரிவதில் அனுபவம் பெற்றிருப்பவரும் (இதில் ஐந்து ஆண்டுகள் தாதித் தொழில் நிருவாகத்தில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்); அத்துடன்

(ஆ) தாதித் தொழில் நிருவாகத்தில் விதித்துரைக்கப்பட்ட பட்டப் பின்படிப்புத் தகைமை பெற்றிருப்பவரும்,

சுகாதார அமைச்சினதும் போதனா வைத்தியசாலைகள் அமைச்சினதும் வைத்திய சேவையிலுள்ள சிறப்புத் தரத்தையும் I ஆம் தரத்தையும் சேர்ந்த தாதித் தொழில் அலுவலர்களினால் தெரிவு செய்யப்பட்டவருமான, பதிவு செய்யப்பட்ட தாதித்தொழில் புரியும் ஒரு தாதி ;

(iii) (அ) தாதிப் பயிற்சிப் பாடசாலையிற் கற்பித்தலில் அல்லது அதன் நிருவாகத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத ஒருகாலப்பகுதி அனுபவமுள்ளவரும் ; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்புத் தகைமை பெற்றிருப்பவரும்,

சுகாதாரத் திணைக்களத்தின் தாதிச் சேவையிலுள்ள சிறப்புத் தரத்தையும் I ஆம் தரத்தையும் சேர்ந்த தாதித் தொழில் அலுவலரால் தெரிவு செய்யப்பட்டவருமான, பதிவு செய்யப்பட்ட தாதித் தொழில்புரியும் ஒரு தாதி ;

(iv) (அ) பகிரங்க சுகாதாரத் தாதித் தொழில் துறையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கான அனுபவமுள்ளவரும் ; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்புத் தகைமை பெற்றிருப்பவரும்,

சுகாதாரத் திணைக்களத்தின் பொதுச் சுகாதாரச் சேவையிலுள்ள சிறப்புத் தரத்தையும் I ஆம் தரத்தையும் சேர்ந்த தாதித் தொழில் அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டவருமான, பதிவு செய்யப்பட்ட தாதித் தொழில்புரியும் ஒரு தாதி ;

(v) (அ) உள்ளூராட்சிச் சேவையில் தொழில் புரிபவரும் ; அத்துடன்

(ஆ) தாதித் தொழிலில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவமுள்ளவரும் ; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்புத் தகைமையொன்று பெற்றிருப்பவரும்,

உள்ளூராட்சிச் சேவையிலுள்ள தாதித் தொழில் அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டவருமான, பதிவு செய்யப்பட்ட தாதித் தொழில்புரியும் ஒரு தாதி ;

(vi) அப்போதைக்குச் சுகாதாரச் சேவையின் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமைகளைப் புரியும் ஆள் ;

(vii) சுகாதாரத் திணைக்களத்தில் தாதித் தொழிலில் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகள் அனுபவம் கொண்ட பதவிநிலைத் தாதிகளிடையே இருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களான பதிவு செய்யப்பட்ட தாதித் தொழில்புரியும் தாதிகள் மூவர் ;

(viii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் விதப்புரையின்மீது அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர் ;

(ix) உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் விதப்புரையின்மீது அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர் ;

(x) போதனு வைத்தியசாலைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் விதப்புரையின்மீது அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் தாதித் தொழில் அலுவலர் ஒருவர் ;

(xi) தாதித்தொழில் நலனில் அக்கறையுடைய, பகிரங்க அலுவலர்கள் அல்லாதவர்களும் அல்லது அரசாங்கத்திடமிருந்து ஓய்வூதியமொன்று பெறுதவர்களுமான ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இருவர் ;

(xii) அப்போதைக்குச் சுகாதார அமைச்சில் தாதித் தொழில் பணிப்பாளரின் (வைத்திய சேவைகள்) கடமைகளைப் புரியும் ஆள் ;

(xiii) அப்போதைக்குச் சுகாதார அமைச்சில் தாதித் தொழில் பணிப்பாளரின் (பகிரங்க சுகாதார சேவைகள்) கடமைகளைப் புரியும் ஆள் ;

(xiv) அப்போதைக்குச் சுகாதார அமைச்சில் தாதித் தொழில் பணிப்பாளரின் (கல்வி) கடமைகளைப் புரியும் ஆள் ;

(xv) போதனு வைத்தியசாலைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சில் அப்போதைக்குத் தாதித் தொழில் பணிப்பாளரின் கடமைகளைப் புரியும் ஆள் ;

(xvi) ஆயுர்வேதத் திணைக்களத்திலுள்ள தாதித் தொழில் அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டவரான, பதிவு செய்யப்பட்ட தாதித் தொழில் புரியும் ஒரு தாதி ;

(xvii) தனியார் துறையிலுள்ள தாதித் தொழில் அலுவலர்களினல் தெரிவு செய்யப்பட்டவரான பதிவு செய்யப்பட்ட தாதித் தொழில் புரியும் தாதியொருவர்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

4. (1) பதவிவழி உறுப்பினர் ஒருவர் தவிர்ந்த பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், முன்னரே அவரது பதவியை வறிதாக்கினலொழிய ஐந்தாண்டு காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது மீளப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் தனது பதவிக் காலம் முடிவடையு முன்னர் தமது பதவியை வறிதாக்கும் இடத்து 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ், பதவியை வறிதாக்கிய உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ள அதே முறையில் வேருேர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) பதவியை வறிதாக்கும் உறுப்பினரொருவரின் இடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், முன்னரே அவரது பதவியை வறிதாக்கினுலொழிய, எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்ருரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுருதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) பேரவையின் ஒவ்வொரு பதவிவழி உறுப்பினரும், எந்தப் பதவியின் பயனைக் கொண்டு அவர் பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்டுள்ளாரோ அப்பதவியை அவர் வகிக்கும் வரை பதவி வகித்தல் வேண்டும்.

**உறுப்பினரினது பதவி வறிதாக்கப்படுதல்.**

5. பதவிவழி உறுப்பினர் ஒருவர் தவிர்ந்த பேரவையின் உறுப்பினர் ஒருவர் பின்வரும் சந்தருப்பங்களில் தமது பதவியை வறிதாக்குகின்ருர் ; அதாவது அத்தகைய உறுப்பினர்—

(அ) இறந்தால் ;

(ஆ) பேரவையின் தலைவருக்கு அல்லது பதிவாளருக்கு முகவரியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியைத் துறந்தால் ;

(இ) பேரவையின் அபிப்பிராயப்படி போதிய காரணமின்றி பேரவையின் அடுத்தடுத்து நடைபெறும் மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருந்தால் ;

(ஈ) பதிவு செய்யப்பட்ட தாதியொருவராகவிருந்து இடாப்பிலிருந்து அவரது அல்லது அவளது பெயர் அகற்றப்பட்டதன் விளைவாக பதிவு செய்யப்பட்ட தாதியொருவராக இல்லாதொழிந்தால் ;

(உ) தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினுல் கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்கி முறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்டால் ;

(ஊ) ஓராண்டு காலமொன்றுக்கு அவர் இலங்கையிலில்லாதிருந்தால் ; அல்லது

(எ) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராகவிருந்து 6 ஆம் பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டால்,

அவர் பதவியை வறிதாக்குகின்ருர்.

**பதவியிலிருந்து உறுப்பினரொருவரை அகற்றல்.**

6. (1) அமைச்சரானவர் பேரவையின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரை அகற்றுவது உசிதமானதெனக் கருதுவாராயின் அதற்கான காரணம் எதையும் காட்டாமலேயே அவரை அகற்றலாம்.

ஆயின், எவ்வாருயினும், வேருேர் அமைச்சரின் விதப்புரையின் மீது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அந்த வேறு அமைச்சரின் ஒருப்பாட்டுடன் மட்டுமே அகற்றப்படுதல் வேண்டும்.

(2) எவரேனும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவர் பதவியில் தொடர்ந்திருத்தலானது பேரவையின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் அளவுக்குப் பேரவையின் உறுப்பினரொருவரென்ற தனது நிலைமையைத் தவருகப் பயன்படுத்தியிருப்பின், அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டுமென அமைச்சருக்குப் பேரவை

விதப்புரை செய்யலாம். அமைச்சர், அத்தகைய விதப்புரைகளின் மீதும் இதன் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைய வும் அத்தகைய உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) முற்போந்த உட்பிரிவின் கீழ் அமைச்சருக்கு விதப்புரையொன்றை பேரவை செய்யுமிடத்து, எந்த உறுப்பினருக்கு எதிராக அத்தகைய விதப் புரை செய்யப்பட்டதோ அந்த உறுப்பினரின் அகற்றுதலுக்கான விதப் புரையொன்று அமைச்சருக்குச் செய்யப்பட்டுள்ளதென அவருக்கு அறி வித்து, அதே நேரத்தில் எழுத்திலான அறிவித்தலொன்று அவருக்குச் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(4) பேரவையின் எந்த உறுப்பினருக்கெதிராக (2) ஆம் உட்பிரிவின் கீழான விதப்புரையொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த உறுப்பினர் (3) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட தேதி யிலிருந்து பதினுன்கு நாட்களினுள் விதப்புரைக்கெதிராக அமைச்சருக்கு முறையீடு செய்யலாம். அமைச்சர், (2) ஆம் உட்பிரிவின் கீழான தனது தத்துவங்களைப் பிரயோகிப்பதா அல்லவா எனத் தீர்மானிப்பதற்கு முன் னர் தம் திறம் கேட்பதற்கான சந்தர்ப்பமொன்றை அத்தகைய உறுப்பின ருக்கு அளித்தல் வேண்டும்.

7. (1) பேரவையின் எல்லா உறுப்பினர்களும் வாக்களிக்க உரித்துடை யவர்களாதல் வேண்டும். வாக்களித்தல், தலைவரைத் தெரிவு செய்தல் முதலியன.

(2) பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து தலைவரொருவரையும், துணைத் தலைவரொருவரையும் பேரவை தேர்ந்தெடுத் தல் வேண்டும் என்பதுடன், தலைவர், அவர் வருகை தந்துள்ள பேரவை யின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதலும் வேண்டும்.

(3) தலைவர் வருகை தராதபோது, துணைத் தலைவர் பேரவையின் கூட்ட மொன்றுக்குத் தலைமை தாங்க வேண்டும். அத்துடன் தலைவர், துணைத் தலை வர் ஆகிய இருவரும் வருகை தராதிருக்கும்போது அத்தகைய கூட்டத் திற்கு வருகை தந்திருக்கும் பேரவையின் உறுப்பினர்கள், வருகை தந் துள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து, அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் நோக்கத்திற்கென தலைவரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

8. கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் பதின்மூன்றாக இருத்தல் வேண்டும். கூட்ட நடப் பெண்.

9. பேரவையின் கவனத்திற்கென எழும் ஒவ்வொரு பிரச்சினையும் அத்த கைய கூட்டத்திற்கு வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரால் தீர்மானிக்கப்படல் வேண்டும் அக்கூட்டத்திற் கான தலைவர் அத்துடன் அவரது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும். பேரவையின் நடவடிக்கைகள்.

10. பேரவையின் ஒவ்வொரு கூட்டத்தினதும் நடவடிக்கைகள் பற்றிய நிகழ்ச்சிக் குறிப்புகள் அந் நோக்கத்திற்கென வைக்கப்பட்டிருக்கும் ஒரு புத்தகத்தில் பதியப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்கும் ஆளினுல் ஒப்பமிடப்படுதலும் வேண்டும். நடவடிக்கை களின் நிகழ்ச்சிக் குறிப்புகள்.

## பாகம் II

## பேரவையின் தத்துவங்களும் பணிகளும்

பேரவையின் தத்துவங்களும், பணிகளும்.

11. (1) பேரவையின் அலுவல்களின் முகாமைக்கும் நிருவாகத்திற்கும் அவசியமானவாறான அல்லது உகந்தனவான அல்லது அவற்றின் இடை நேர் விளைவான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்குப் பேரவை தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக் குப் பங்கமின்றி, பேரவையானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளை யும் பிரயோகிக்கலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :—

(அ) சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப் பட்ட பொதுத் தாதித்தொழில் சான்றிதழொன்றை அல்லது இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அங்கிகரிக்கப் பட்ட கற்பித்தல் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பொதுத் தாதித் தொழில் சான்றிதழொன்றைப் பெற்றிருக்கும், அத்த கைய நிறுவனத்தில் பெறப்படும் பயிற்சியின் பாடவிதானத்தை யும் தரத்தையும் கவனத்திற் கொண்டு சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு தாதியாக ஆள் ஒருவரைப் பதிவு செய்தல் :

(ஆ) பேரவையினால் பேணிவரப்படும் இடாப்பில் அவர்களது பெயர் களைப் பதிவு செய்வதற்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களைத் தகைமைபெற்ற தாதிமாரிடமிருந்து அறவிடுதல் ;

(இ) பதிவுசெய்யப்பட்ட தாதியொருவரின் பெயரை இடாப்பிலிருந்து இடைநிறுத்தம் செய்தல் அல்லது அகற்றுதல் அல்லது இடாப் பில் மீளச்சேர்த்தல் அல்லது அதற்கென ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கிணங்க அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்தல் ;

(ஈ) தாதிமாருக்கான எல்லாக் கற்கை நெறிகளுக்கும் தேர்வுநாடிகளைத் தெரிவு செய்வதற்கும் ஆட்சேர்ப்பதற்குமான நிபந்தனைகளை அரசாங்கத்திற்கு விதந்துரைத்தல்;

(உ) தாதிமாருக்கான எல்லாக் கற்கைநெறிகளினதும் பாடவிதா னத்தை அரசாங்கத்திற்கு விதந்துரைத்தல் ;

(ஊ) தாதிமாருக்கான கற்கைநெறிகளில் பயன்படுத்தப்பட வேண்டிய பாடப் புத்தகங்களை அரசாங்கத்திற்கு விதந்துரைத்தல், அத்து டன் அவசியமாயின் அத்தகைய பாடப்புத்தகங்களைத் தயாரித்து வெளியிடுதல் ;

(எ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகத் தாதிமாருக்கான அத்தகைய நலன்புரி வசதிகளின் ஏற்பாட்டை உறுதிசெய்தல்;

(ஏ) தாதித் தொழிலின் தகுந்த நியமங்களைப் பேணுதலை உறுதிப் படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய நடவடிக்கை களை அரசாங்கத்திற்கு விதந்துரைத்தல்;

(ஐ) தாதித்தொழில் மீதான கற்கை நெறிகளை வழங்கும் கல்வி நிறுவனங்களினது பரிசோதனைக்கெனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியுடன் ஒழுங்குகளைச் செய்துகொள்ளல்;

(ஒ) தாதிமாரின் உயர்தொழில் நடத்தையை ஒழுங்குபடுத்தும் ஒழுக்கக்கோவையொன்றை விதித்துரைத்தல்;

(ஓ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, பேரவையின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், ஊழியத்திலமர்த்தலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும் அத்துடன் அதன் ஊழியர்களின் நியமனம், பதவியுயர்வு, ஊதியம், அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அத்துடன் அவர்களுக்கு விடுமுறையையும் வேறு நன்மைகளையும் வழங்குதல் ஆகியன தொடர்பான விதிகளை ஆக்குதலும்;

பேரவையின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் கையளித்தல்.

12. பேரவையானது, காலத்துக்குக் காலம் அதன் தத்துவங்களுள், பணிகளுள் அல்லது கடமைகளுள் எதனையும் பேரவையின் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவிற்குக் கையளிக்கலாம்; அத்துடன் அத்தகைய குழு, பேரவையினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அத்தகைய தத்துவங்களை, பணிகளை அத்துடன் கடமைகளைப் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம்.

பேரவையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான ஊதியம்.

13. பேரவையின் உறுப்பினர்களுக்கு, நிதியென்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகப் பேரவையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

பதிவாளரும் வேறு அலுவலர்களும்.

14. பேரவையானது பதிவாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். அவரே பேரவையின் செயலாளராகவும் பொருளாளராகவும் செயலாற்றுதலும் வேண்டும்.

அமைச்சருக்கு மேன் முறையீடு.

15. (1) பேரவையின் கட்டளையொன்றினால் அல்லது முடிபொன்றினால் அல்லது 12 ஆம் பிரிவின்கீழ் பேரவையின் ஏதேனும் தத்துவம், கடமை, அல்லது பணி கையளிக்கப்பட்டிருக்கும் குழுவொன்றின் கட்டளையொன்றினால் அல்லது முடிபொன்றினால் இன்னலுறுகின்ற எவரேனும் ஆள் அத்தகைய கட்டளைக்கு அல்லது முடிபுக்கு எதிராக அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அவரின் முடிபு இறுதியானதாகவிருத்தலும் வேண்டும்.

(2) ஒரு மேன்முறையீட்டைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்கென அமைச்சரால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவலையும் பேரவையும் பதிவாளரும் தருதல் வேண்டும்.

பதிவாளரினால் வைத்திருக்கப் படவேண்டிய இடாப்பு.

16. (1) பதிவாளர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க, இலங்கையில் தாதிமார்களாகத் தொழில் புரிவதற்குத் தகைமையுடையவர்களும், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் பேரவை தீர்மானித்திருக்கின்றவர்களுமான ஆட்களைப் பற்றிய இடாப்பொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(2) இருபத்தொரு வயதிற்குக் குறைந்த ஆள் எவரையும் தாதி ஒருவராகப் பதிவு செய்துகொள்ளுதல் ஆகாது.

(3) இலங்கையரல்லாத எவரையும் அமைச்சரின் விதப்புரையின்மீது குடியரசின் சனாதிபதியின் அங்கீகாரத்துடன் தவிர பதிவு செய்துகொள்ளுதல் ஆகாது.

(4) பதிவாளர், பதிவு செய்யப்படுவதற்கான தமது கோரிக்கையை எண்பிக்கும் ஒவ்வோர் ஆளினதும் பெயரை இடாப்பில் பதிதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒவ்வோர் ஆளினதும் பெயரையும் பேரவையின் அடுத்த கூட்டத்தில் அதற்கு அறிவித்தலும் வேண்டும்.

(5) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மீதன்றி இச் சட்டத்தின்கீழ் ஆளெவரையும் பதிவு செய்துகொள்ளுதல் ஆகாது.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப் பட்ட தாதிமார் கள் இச்சட்டத் தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வர்களெனக் கருதப்படுதல்.

17. நியமித்த தேதிக்கு நேர் முந்திய நாளன்று மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தாதிமார்கள், அத் தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், பதிவாளர் அத்தகைய எல்லா ஆட்களினதும் பெயர்களை இச்சட்டத்தின்கீழ் வைத்திருக்கப்படும் இடாப்பிற்கு மாற்றுதலும் வேண்டும்.

தகைமை மாற்றம்.

18. இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஆள் எவரும், எந்தப் பட்டத்தை அல்லது தகைமையை ஆதாரமாகக்கொண்டு அவர் பதிவு செய்யப்பட்டுள்ளாரோ அந்தப் பட்டம் அல்லது தகைமை அல்லாத ஏதேனும் பட்டத்தை அல்லது தகைமையைப் பெறும்போது, இடாப்பில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட பட்டத்துடன் அல்லது தகைமையுடன் மேலதிகமாக அத்தகைய வேறு பட்டத்தை அல்லது தகைமையை இடாப்பில் பதிவு செய்வதற்கு விண்ணப்பம் செய்யலாம்.

பதிவாளர் இடாப்பை நாளதுவரை வைத்திருத்தல்.

19. (1) பதிவாளர், இடாப்பைச் செம்மையாகவும் நாளதுவரையாகவும் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், இறந்த எவரேனும் ஆளின் பெயரை இடாப்பிலிருந்து இல்லாதாக்குதலும் வேண்டும்.

(2) பதிவாளர், பேரவையின் கட்டளைகளினாலும் அத்துடன் அக்கட்டளைகளுக்கிணங்கவும், இடாப்பொன்றிலிருந்து அல்லது இடாப்பொன்றிலுள்ள ஏதேனும் பதிவை, அத்தகைய பதிவு மோசடியாக அல்லது செம்மையற்றதாகச் செய்யப்பட்டுள்ளதெனப் பேரவையின் திருப்திக்கு எண்பிக்கப்பட்டிருப்பின், அழித்து நீக்குதல் வேண்டும் அல்லது திருத்துதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஏதேனும் அழித்து நீக்கற்கான அல்லது திருத்தத்திற்கான காரணத்தை இடாப்பில் பதிதலும் வேண்டும்.

இடாப்பிலிருந்து பெயர்களை அழித்து நீக்குதல்.

20. (1) பேரவையானது, எவரேனும் ஆள்—

(அ) எந்த திப்புளோமாவை, பட்டத்தை அல்லது சான்றிதழை ஆதாரமாகக் கொண்டு அவர் அல்லது அவள் ஒரு தாதியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாரோ அந்த ஏதேனும் திப்புளோமாவை, பட்டத்தை அல்லது சான்றிதழை இழப்பாராயின் ;

(ஆ) மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்து, அவர் தாதியொருவராகத் தொழில் புரிவதற்குத் தகுதியற்றவர் என அது காட்டுமாறாயின் ;

(இ) தாதியொருவராக உயர்தொழில் புரிவதற்குத் தகுதியற்ற பண்புடையவராக இருப்பின் அல்லது தாதியொருவராக உயர் தொழில் புரிவதற்குத் தகுதியற்றவராக நடத்தைக் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் ;

(ஈ) தாதியொருவராகக் கவலையீனம் அல்லது தகுதியின்மை காரணமாக அவ்வாறு தொடர்ந்து தொழில் புரிவதற்குப் பாதுகாப்பாக அனுமதிக்கப்பட முடியாதிருப்பின்,

அவ்வாளின் பெயரை இடாப்பிலிருந்து அழித்துநீக்குவதற்குப் பதிவாளருக்குக் கட்டளையிடுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) பத்தொன்பதாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது இப் பிரிவின்கீழ் இடாப்பிலிருந்து எவரேனும் ஆளின் பெயரை அழித்து நீக்குதற்கான கட்டளையொன்றைப் பேரவை ஆக்குவதற்கு முன்னர், அத்தகைய கட்டளையொன்று ஏன் ஆக்கப்படலாகாது என்பதற்கான காரணத்தைக் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள், அதாவது, அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து எச்சந்தர்ப்பத்திலும் பதினன்கு நாட்களுக்குக் குறையாததாக இருக்கவேண்டிய காலத்தினுள் காட்டுமாறு தேவைப்படுத்தி அத்தகைய ஆளுக்கு எழுத்திலான அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் பேரவையானது, அதன் கட்டளையை ஆக்குவதற்கு முன்னர் அத்தகைய ஆளின் ஆட்சேபனைகள் எவையேனும் இருப்பின் அவற்றைக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்ட ஆளிற்கு அதன் கட்டளையை எழுத்தில் தெரியப்படுத்தலும் வேண்டும்.

இடாப்பில் அடங்கியுள்ளவற்றின் எண்பிப்பு.

21. (1) குடியியலிலாயினுஞ்சரி அல்லது குற்றவியலிலாயினுஞ்சரி எல்லா நடவடிக்கைகளிலும்—

(அ) உண்மையெனப் பதிவாளரினல் அத்தாட்சிப்படுத்தப்பட்டதான ஓர் இடாப்பிலிருந்து ஏதேனும் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி அல்லது அதன் பிரதி, எண்பிப்பு இல்லாமல் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், இடாப்பில் அடங்கியுள்ளனவற்றின் போதிய முதற்றோற்ற அளவிலான சான்றாதலும் வேண்டும்.

(ஆ) எவரேனும் ஆளின் பெயர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளதென அல்லது பதிவு செய்யப்படவில்லையென அல்லது சான்றிதழில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேதியில் அல்லது அத்தாட்சிப் படுத்தப்பட்ட காலப்பகுதியின் போது எவரேனும் ஆளின் பெயர்

பதிவு செய்யப்பட்டிருந்ததென் அல்லது அவ்வாறு பதிவு செய்யப்படவில்லையெனப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ், சான்றாக ஏல்தகைமையுடையதாதல் வேண்டும் என்பதுடன். அதனகத்துக் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் போதிய முதற்றோற்ற அளவிலான சான்றாகவிருத்தலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்திற்காக, நீதிமன்றம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, அத்தகைய ஏதேனும் பிரதியில், பிரித்தெடுத்த பகுதியில் அல்லது சான்றிதழில் உள்ள பதிவாளரின் ஒப்பத்திற்கு அல்லது பதிவாளராக அவரது நியமனத்திற்கு எண்பிப்பு எதுவும் கொடுக்கத் தேவையில்லை.

## பாகம் III

### நிதியும் கணக்குகளும்

பேரவையின் நிதியம்.

22. (1) பேரவையானது, "இலங்கைத் தாதிமார் நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்றைத் தாபித்துப் பேணிவருதல் வேண்டும்.

(2) நிதியத்திற்குள்—

(அ) இச்சட்டத்தின்கீழ் பதிவுக் கட்டணங்களாகப் பெறப்படும் ஏதேனும் பணம் ;

(ஆ) பேரவைக்குச் செய்யப்பட்ட ஏதேனும் பண நன்கொடைகளும், ஏதேனும் கொடையின் விற்பனையிலான வரும்படிகளும் ; அத்துடன்

(இ) முதலீடுகளிலிருந்து அல்லது வேறு வரவுகளிலிருந்து ஏதேனும் வருமானம்

ஆகியன செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) பேரவையின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும். புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் பேரவையினால் உறப்பட்ட எவையேனும் செலவினங்களை கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும் பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) பேரவையானது நிதியத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

பேரவையின் கணக்குகள்.

23. (1) பேரவையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குப்புத்தகங்களைப் பேரவை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) பேரவையானது, அதன் கணக்குகளை அங்கீகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரைக்கொண்டு கணக்காய்வு செய்வித்தல் வேண்டும்.

(3) பேரவையின் நிதியாண்டானது சனவரி முதலாந் நாளன்று தொடங்கும் ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

ஆண்டு அறிக்கை.

24. ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் பின்னரும் அத்துடன் அடுத்துவரும் ஒவ்வோர் ஆண்டினதும் மார்ச்சு முப்பத்தோராம் தேதிக்கு முன்னரும் பேரவையானது, அந்த நிதியாண்டின்போது அதன் செயற்பாடுகள் பற்றிய அத்துடன் அதன் வருமானமும் செலவினமும் பற்றிய உண்மையானதும் செம்மையானதுமான கணக்கொன்றைத் தருவதான அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

தண்டங்கள்.

25. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் முறையாகப் பதிவு செய்யப்படாது "பதிவு செய்யப்பட்ட தாதி" என்ற தலைப்பை அல்லது அதற்குச் சமமானதை, ஏதேனும் வேறு மொழியில் தனியாகவோ அல்லது ஏதேனும் பிற சொல்லுடன் அல்லது எழுத்துடன் சேர்த்தோ, பயன்படுத்துகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழ் அவர் அல்லது அவள் பதிவுசெய்யப்பட்டவரென அல்லது பதிவு செய்யப்பட்ட தாதியொருவராகச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பவரென உட்கிடையாகக் காட்டும் ஏதேனும் பெயரை, தலைப்பை, சேர்ப்பை, விவரணத்தை, சீருடையை அல்லது பட்டியைப் பயன்படுத்துகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தாதிமாரின் பயன்பாட்டுக்கு விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பை, சீருடையை அல்லது பட்டியைப் பயன்படுத்துகின்ற ; அல்லது

(ஆ) அவருக்கு அல்லது அவளுக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு இச்சட்டத்தின்கீழ் தாதியொருவராக வழங்கப்பட்ட ஏதேனும் பதிவுச் சான்றிதழை ஏமாற்றும் முன்னத்துடன் பயன்படுத்துகின்ற

ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் முதற் தவறொன்றின் விடயத்தில் ஆயிரம் ரூபாவையும் இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரான தவறெதனதும் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவையும் விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இடாப்பு தொடர்பான ஏதேனும் விடயத்தில் வேண்டுமென்று ஏதேனும் பொய்யானதைப் புனைகின்ற அல்லது புனைவிக்கின்ற ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) மருத்துவ நிறுவனமொன்றில் வேலைக்கு தாதி ஒருவராக வேறு ஆளைத் தொழிலுக்கமர்த்தும் ஊழியத்திலமர்த்தும் எவரேனும் ஆள், அந்த வேறு ஆள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படாதிருப்பின் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) பதிவு செய்யப்பட்ட தாதியொருவராகவில்லாது இலாபத்திற்குத் தாதித்தொழில் புரியும் எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவரின் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) உட்பிரிவுகள் (3) அல்லது (4) என்பதிலுள்ள எதுவும், நியமித்த தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு—

(அ) மருத்துவ விடுதிகள் (ஒழுங்குபடுத்தற்) சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவ விடுதியொன்றில் ஒரு தாதியாக வேலை செய்வதற்கென அங்கீகரிக்கப்படாத தாதியொருவரைத் தொழிலுக்கமர்த்தும் எவரேனும் ஆளுக்கு ; அல்லது

(ஆ) பதிவு செய்யப்பட்ட தாதியொருவராக இல்லாதிருந்து மருத்துவ விடுதிகள் (ஒழுங்குபடுத்தற்) சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ விடுதியொன்றில் வருவாய்க்காகத் தாதித் தொழில் புரியும் எவரேனும் ஆளுக்கு

ஏற்புடையதாதல் ஆகாது.

ஒழுங்குவிதிகள்.

26. (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பிலும் அத்துடன் குறிப்பாகப் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) இலங்கையில் தாதிமாராகத் தொழில் புரிவதற்குத் தகைமைபெற்ற ஆட்கள் பற்றிய இடாப்பின் படிவமும் அதனை வைத்திருக்கும் முறையும் ;

(ஆ) தாதியொருவராகப் பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பத்தின் படிவம் ;

(இ) இச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஆட்களினால் அணியப்படக்கூடிய சீருடை, பட்டி அத்துடன் வேறு பிரித்துக்காட்டும் உபாயங்கள் ;

(ஈ) பதிவு செய்தல் தொடர்பிலும் இடாப்பிலான மாற்றம் தொடர்பிலும் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள் ;

(உ) ஒழுக்காற்று நடவடிக்கைமுறை.

(2) அமைச்சரினல் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக் கூடியளவு விரைவில், அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனல் அதன்கீழ் அதன் முன்னர் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடிக்குப் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) எத்தேதியில் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

27. (1) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் IX ஆம் பாகம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது. நீக்கம்.

(2) மேற்கூறப்பட்ட பாகத்தை நீக்கஞ்செய்வது எப்படியிருப்பினும், அப்பாகத்தின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்டு நியமித்த தேதியன்று வலுவிலுள்ள எல்லா ஒழுங்குவிதிகளும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்படலாம், அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அவை நீக்கஞ்செய்யப்படலாம்,

28. பேரவையானது இலஞ்சச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும். பேரவையானது இலஞ்சச் சட்டத்தின்கீழ் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றுகவிருத்தல்.

29. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினலன்றி— பொருள்கோடல்.

"அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர்" என்பது—

(அ) இலங்கையின் வரையறுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்கென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினல் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருப்பவருமான தனியாளொருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கை வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக விருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்கென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருள்படும்;

"இலங்கை மருத்துவப் பேரவை" என்பது (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட இலங்கை மருத்துவப் பேரவை எனப் பொருள்படும்;

"பதவிவழி உறுப்பினர்" என்பது 3 ஆம் பிரிவின் (xii), (xiii), (xiv), (xv), (xvi) ஆம் பந்திகளின் ஏற்பாடுகளின்கீழ் பேரவையின் உறுப்பினரொருவராகவிருக்கும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட எனப் பொருள்படும்.